# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.283 /2015

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 08–10–2025.
சுந்தரராஜ் வா..சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) தாவாச்சொத்து கொப்புசித்தம்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். பந்தல்குடி கிராமத்திற்கும் தாவாச்சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து பந்தல்குடி குரூப்பிலிருப்பதாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் தாவாச்சொத்து கொப்புசித்தம்பட்டி கிராமத்தில் உள்ளது தவறுதலாக பந்தல்குடி கிராமத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து நத்தத்தில் உள்ளதா என்றால் ஆமாம் குடியிருப்பு பகுதி என சாட்சி கூறுகிறார். நத்தம் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிராதில் நத்தம் சர்வே எண்.140/1 என குறிப்பிட்டுள்ளேன் அது சரியா தவறா என்றால் தெரியாது. தாவாச்சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தை நான் டேப் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. கிழமேல் 102 அடி தென்வடல் 73 அடி என எவ்வாறு குறிப்பிட்டேன் என்றால் நான் குறிப்பிடவில்லை என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் கிழமேல், தென்வடல் அளவுகள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

(2) தாவாச்சொத்தின் மேற்கே தூத்துக்குடி ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் வடக்கே ஓடை உள்ளது என்றால் ஓடை பாதைக்கும் வடக்கே உள்ளது என சாட்சி கூறுகிறார். பாதை கிழமேல் பாதை. பாதை தென்வடலாக 20 அடி இருக்குமா என்றால் ஆமாம். பாதைக்கும் வடக்கே ஓடை உள்ளது என்பது தான் எங்கள் கட்சி என்றால் சரிதான். தாவாச்சொத்தின் தெற்கே கே.எஸ்.அழகர்சாமி இடம் உள்ளது என்றால் ஆமாம். ஜின்னிங் மில் வைத்திருப்பவர் இடமா என்றால் ஆமாம். அவர் யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் கிருஷ்ணசாமி மகன் சீனிவாசனிடமிருந்து வாங்கினார். தாவாச்சொத்தின் கிழக்கே வசந்தா என்பவரின் இடமும், வீடும் உள்ளது என்றால் ராமசாமி, வசந்தா, கனகராஜ்

ஆகியோரின் இடமும், வீடும் உள்ளது என சாட்சி கூறுகிறார். ராமசாமி யார் என்றால் அய்யணன் செட்டியார் மகன் ஆவார். வசந்தா வீட்டிற்கு மேற்கே அய்யணன் செட்டியார் வீடு உள்ளது.

(3) ராமசாமி செட்டியாரின் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. தாவாச்சொத்தின் கிழக்கே சுப்பம்மாள் கிரயம் பெற்ற இடமும், அழகரக்காள் காலி இடமும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சுப்பம்மாள் இடம் இருப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்பம்மாளின் இடம் யாருக்கு பாத்தியம் என்றால் களத்திற்கு தான் பாத்தியம் என சாட்சி கூறுகிறார். 1,2 ம் பிரதிவாதியின் உறவின்முறைக்கு சொந்தமான களத்திற்கு பாத்தியம் என்றால் சரிதான். அழகரக்காள் இடம் என்று இருப்பது யார் இடம் என்று எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். களம் என்பது கிழமேல் 135 அடி தென்வடல் 90 அடி என்றால் அது எனக்குத் தெரியாது. களத்திற்கு வடக்கே கிழமேல் பாதை இல்லை என்றால் சரியல்ல. பாதை இருக்கிறது என்று காண்பிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு பாதை இல்லை என்பதால் தான் மேற்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(4) வசந்தா வீட்டிற்கும் கிழக்கே ராமகிருஷ்ணன் வீடு உள்ளது. அதற்கும் கிழக்கே அழகர்சாமி வீடு உள்ளது. அதற்கும் கிழக்கே தென்வடல் வீதி உள்ளது என்றால் சரிதான். அழகர்சாமி, ராமகிருஷ்ணன், வசந்தா ஆகியோர் வீடுகள் சர்வே எண்.141 ல் தான் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. தென்வடல் வீதிக்கும் கிழக்கே காலி இடம் உள்ளது அது 150 அடி இருக்கும். அதற்கும் கிழக்கே ஓடை உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.140 என்பதும், 140/1 என்பதும் கிழமேல் எவ்வளவு அடி இருக்குமென எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் எத்தனை பேர் விவசாயிகளாக இருக்கிறீர்கள் என்றால் 200 பேர் இருக்கும். 200 பேருக்கும் நிலம் உள்ளது என்பதற்கு பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 200 பேர் விவசாயிகளாக இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பாதிபேர் வேறு வேலைக்கு போய்விட்டனர். டிராக்டர் வைத்து விவசாய வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். களம் இல்லை என்பதால் ரோட்டில் வைத்தும் அடிக்கிறோம் என சாட்சி கூறுகிறார். மிசின் மூலம் விவசாயப்பொருட்களை அறுவடை செய்கிறோம். வசதியில்லாதவர்கள்

ரோட்டில் போட்டு அடித்து அறுவடை செய்கிறார்கள்.

(5) எத்தனை வருடங்களாக மிசினிலும், ரோட்டிலும் போட்டு வேலை செய்கிறோம் என்றால் சுமார் 6 வருடங்களாக செய்து வருகிறோம். 30 வருடத்திற்கும் மேலாக மிசினிலும், ரோட்டிலும் போட்டுதான் வேலை செய்கிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் விவசாயிகளின் பிரதிநிதிகளாக வழக்கு தாக்கல் செய்திருப்பது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மீது விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் 264 பேர் எங்கள் பிரதிநிதித்துவம் மீது ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவர்களை நாங்கள் வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். எங்கள் தரப்பில் 230 பேர் உள்ளனர் என்றால் சரிதான். அந்த 230 பேர் யார்,யார் என்று நீதிமன்றத்தில் பட்டியல் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 230 பேருக்கும் நிலங்கள் உள்ளது என்பதற்கு பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நானும், 230 பேரும் விவசாயம் செய்கிறோம் என்பதற்கு சாகுபடி அடங்கல் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

(6) எங்கள் தரப்பில் உறவின்முறை பதிவு செய்துவைத்துள்ளோமா என்றால் பதிவு செய்யவில்லை ஆனால் உறவின்முறை உள்ளது. எப்போது இருந்து உறவின்முறை உள்ளது என்றால் நான் பிறக்கும்போதே உறவின்முறை இருந்தது என சாட்சி கூறுகிறார். 1,2 பிரதிவாதிகளின் உறவின்முறையில் நான் உறுப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் தான் சங்கம் வைத்துள்ளனர் நாங்கள் உறவின்முறை வைத்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். மேற்படி விவரத்தை பிராதில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. எங்களுக்கு ஆதரவாக 230 பேர் இருக்கிறார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன். பிராதில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வசந்தா வீட்டிற்கும் தெற்கே கந்தசாமி இடம் உள்ளது. கந்தசாமி இடத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. கந்தசாமிக்கு அந்த இடம் எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்வீக பாத்தியம். கந்தசாமி இருக்கிறாரா என்றால் கொரானாவில் இறந்துவிட்டார். கந்தசாமியின் மனைவி பெயர் சுப்புலட்சுமி.

(7) கந்தசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 6 பிள்ளைகள். மல்லிகா, சண்முகலட்சுமி, முத்துலட்சுமி, கனகராஜ், செல்லத்தாய், ஜெயலட்சுமி என்பவர்கள் ஆவார்கள். கந்தசாமி அவருடைய சொத்தை

யாருக்காகவும் விற்றுவிட்டாரா என்றால் இல்லை. அவர் மகன் கனகராஜ் அனுபவித்து வருகிறார். வீடுகட்டியிருக்கிறாரா என்றால் கொல்லை இடமாக வைத்து அனுபவித்து வருகிறார். கந்தசாமி இடத்தின் மேற்கே களம் உள்ளது. அழகரக்காள் யார் என்றால் கந்தசாமியின் பாட்டி என சொல்வார்கள் மற்றபடி தெளிவாகத்தெரியாது என சாட்சி கூறுகிறார். அழகரக்காளுக்கு களத்தை ஒட்டி இடம் இருந்ததா என்றால் இருந்ததாக சொல்வார்கள் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். தாவா வழக்கில் என்ன பரிகாரம் கோருகிறோம் என்றால் தாவாச்சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட களம் என கேட்டுள்ளோம். தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என சொல்கிறோமா என்றால் இல்லை. அவர்களுக்கும் உரிமை உள்ளது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்து எங்களுக்கு பாத்தியம் என கேட்கிறோமா, களமாக புழங்குவதற்கு உரிமை உள்ளது என கேட்கிறோமா என்றால் களமாக உபயோகிக்க உரிமை கோருகிறோம். தாவாச்சொத்தில் சமுதாய கூடம் கட்டுவதற்கு 2014ம் வருடமே தீர்மானம் போட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது.

(8) அந்த சமயத்தில் நானும், 1ம் வாதியும் 1,2 பிரதிவாதிகள் உறவின்முறையில் மெம்பராக இருந்தோம் என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டுவதற்கு தலைக்கட்டு வரி 1000 கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அதன்பின்னர் கட்டிடம் கட்ட ஆரம்பித்துவிட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் தடுத்தோம் என சாட்சி கூறுகிறார். போலீசில் புகார் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். 2014ம் வருடமே கட்டிடம் கட்ட ஆரம்பித்தபோதே காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டோம். நாங்கள் வழக்கு போடும்போதே பில்லர் எழுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. 2015 லிருந்து தற்போதுவரை அந்த இடத்தில் சமுதாயக்கூடம் உள்ளது என்றால் சரிதான். சமுதாயக்கூடத்தில் 1,2 பிரதிவாதிகள் போட்ட பூட்டிற்கு மேல் பூட்டு நாங்கள் போட்டுள்ளோம் என்றால் சரிதான். 2015ம் வருடம் மேல்பூட்டு போட்டுள்ளோம் என்றால் 2023ல் தான் பூட்டு போட்டோம் என சாட்சி கூறுகிறார். என்னென்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. களம் வேண்டும் என கேட்டுள்ளோம் என சாட்சி கூறுகிறார்.

(9) வா.சா.ஆ.2ன்படி 1949 ஜீலை 6ம் நாள் அப்போதிருந்த டிரஸ்டிகளான கொப்புலு செட்டியார் வகையறா தாவாச்சொத்தை கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். தாவாச்சொத்தை கந்தன்செட்டியார்–1, அழகரக்காள்–2, வெள்ளையன்செட்டியார்–3 ஆகிய மூவரும்

எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. எதற்காக தாவாச்சொத்தை கிரயம் வாங்கினார்கள் என சரத்துக்கள் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தை களத்திற்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் வேறு உபயோகித்திற்கு பயன்படுத்தக்கூடாது என நிபந்தனை உள்ளதா என்றால் இல்லை. உறவின்முறையின் மெஜாரிட்டி உறுப்பினர்கள் தீர்மானம் போட்டு தீர்மானத்தின்படி எந்த உபயோகித்தார்காக 30 கெஜம் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதோ அதற்காக பயன்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ன் கிழமேல் கெஜம் 45 தென்வடல் 30 என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவுகள் தவறு என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.2யை எழுதிக்கொடுத்த நபர்கள் அளவு கூடுதலாக எழுதிக்கொடுத்தோம் என சீர்திருத்த பத்திரம் போட்டுள்ளார்களா என்றால் தெரியாது.

(10) வா.சா.ஆ.2ல் சித்தான் ஓடைக்கும் தெற்கே என உள்ளது என்றால் சரிதான். ஓடைக்கு தெற்கே பாதை இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பாதை இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அழகர் ஆசாரி புஞ்சைக்கும் முத்தாலு செட்டியார் கொல்லைக்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது அவர் யார் என தெரியுமா என்றால் எனக்குத் தெரியும். முத்தாலு செட்டியாரின் வாரிசுகள் கந்தசாமி, வெள்ளைச்சாமி ஆவார்கள். அழகர் ஆசாரி வாரிசுகள் செண்பகம் ஆசாரி, குருசாமி ஆவார்கள். கிருஷ்ணசாமி நாயக்கரின் கொல்லைக்கும் வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணசாமி நாயக்கர் இறந்துவிட்டார் அவரது மகன் சீனிவாசன் அவருடைய இடத்தை T.A.S.அழகர்சாமிக்கு விற்றுவிட்டார். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.2ல் உள்ள அளவு தவறு என பரிகாரம் எதுவும் கேட்டுள்ளோமா என்றால் இல்லை. எங்களுக்கு வேண்டிய நபர்களுக்கு இடத்தை எடுத்துக்கொடுக்க வேண்டும் என்பதற்காக குறைவான அளவை காண்பித்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

(11) பத்திரத்தில் உள்ள அளவு பூமியில் உள்ளது அதில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. 29.05.1948ல் சுப்பம்மாள் என்பவர் கிரயம் வாங்கிய பத்திரம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பற்றி எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1 ல் உள்ள 1ம் லக்க சொத்து தாவாச்சொத்திற்கு

கிழக்கே உள்ள சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள 2ம் லக்கச்சொத்து தாவாச்சொத்திற்கு கிழக்கே தள்ளி உள்ளது என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.1 ல் உள்ள 3ம் லக்கச்சொத்து எந்த இடத்தில் உள்ளது என எனக்கு ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார். மீதி உள்ள நிலங்கள் புஞ்சையாக உள்ளது அவை எங்கே உள்ளன என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1ற்கும் தாவாச்சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 1949ல் குருவம்மாளுக்கு சின்ன அய்யணன் வகையறா எழுதிக்கொடுத்த அடமானபத்திரம் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் உள்ள சொத்து எந்த இடத்தில் உள்ளது என எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3ற்கும் தாவாச்சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.10.08 14:45:09 +0530